தின கனி காலை நாளிதழ்
மாவட்டம் & தாலுகா வாரியாக நிருபர்கள் புகைப்பட கலைஞர்கள் தேவை
Call : 044-2272060 9443699066

admin@dhinakani.com
RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்

KANI GYM
CALL:9894808044

மலர்:03 இதழ்:243 4 பக்கங்கள் 01:04:2026 புதன்கிழமை விலை ரூ,6 வருடசந்தா ரூ,1825



அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை
இருள்சேர்ந்த இன்னா உலகம் புகல்.

**விளக்கம்:** அறியாமையாகிய இருள் பொருந்திய துன்ப உலகில் இருந்து வாழும் வாழ்க்கை, அருள் பொருந்திய நெஞ்சம் உடையவர்களுக்கு இல்லை.


## குஜராத்தில் ரூ.3,300 கோடியில் செமி கண்டக்டர் ஆலை: பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்



**அகமதாபாத்: ஏப்,01**

குஜராத் மாநிலம் அகமதாபாத் அருகே உள்ள சனந்த் ஜிஐடிசி வளாகத்தில், கெய்ன்ஸ் செமிகான் நிறுவனத்தின் ரூ.3,300 கோடி மதிப்பிலான செமி கண்டக்டர் உற்பத்தி ஆலையை பிரதமர் நரேந்திர மோடி நேற்று தொடங்கி வைத்தார்.இந்திய செமி கண்டக்டர் திட்டத்தின் (ஐஎஸ்எம்) கீழ் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களில், மைக்ரான் டெக்னாலஜி நிறுவனத்துக்கு அடுத்தபடியாக வணிகரீதியிலான உற்பத்தியைத் தொடங்கும் 2-வது பெரிய ஆலை இதுவாகும். இது, இந்தியாவின் உற்பத்தித் திறனை வலுப்படுத்துவதோடு, சிப் உற்பத்தியில் நமது நாட்டை உலகளவில் முக்கிய மையமாக மாற்றுவதற்கான இலக்கை அடைவதை துரிதமாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதுகுறித்து பிரதமர் மோடி தனது எக்ஸ் சமூக வலைதளத்தில் கூறியுள்ளதாவது: கெய்ன்ஸ் செமிகான் ஆலை திறப்பு, தற்சார்பு இந்தியா நோக்கிய நமது பயணத்தை மேலும் வலுப்படுத்தியுள்ளது. இது நாட்டில் வலுவான செமி கண்டக்டர் உற்பத்திச் சூழலை உருவாக்குவதில் ஒரு மைல்கல்லாகும். இந்த ஆலையில் உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது. இது இந்தியாவின் செமி கண்டக்டர் கட்டமைப்பு எந்த வேகத்தில் வளர்ந்து வருகிறது என்பதற்கான சான்றாக அமைந்துள்ளது. இவ்வாறு பிரதமர் தெரிவித்துள்ளார்.

## டெல்லியின் முக்கிய கோயில்களை தாக்க திட்டமிட்ட லஷ்கர் கமாண்டர் ஷபீர் அகமது லோன் கைது



**புதுடெல்லி: ஏப்,01**

நாட்டில் உள்ள முக்கிய கோயில்கள் மீது தாக்குதல் நடத்த திட்டமிட்ட லஷ்கர்-இ-தொய்பா கமாண்டர் ஷபீர் அகமது லோன் டெல்லி போலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இந்தியாவால் மிகவும் தீவிரமாக தேடப்படும் தீவிரவாதிகளில் ஒருவர் லஷ்கர்-இ-தொய்பா கமாண்டர் ஷபீர் அகமது லோன். இவர், தமிழ்நாட்டின் திருப்பூர், மேற்கு வங்கத்தின் மால்டா மற்றும் டெல்லியில் இருந்து இளைஞர்களைத் திரட்டியுள்ளார். சந்தேகத்தைத் தவிர்க்க, தென்னிந்தியாவில் வசிப்பவர்களை வட இந்தியாவில் தாக்குதல் நடத்தவும், வட இந்தியர்களை தெற்கில் பயன்படுத்தவும் அவர் திட்டமிட்டிருந்தார்.அவர் நியமித்த நபர்கள் பல இடங்களை உளவு பார்த்துள்ளனர். நீண்ட கால இடைவெளியில் தொடர் குண்டு வெடிப்புகளை நடத்துவதே இவர்களது திட்டமாக இருந்துள்ளது. இதேபோல், மேற்கு வங்கத்தில் சட்ட விரோதமாக வசிக்கும் வங்கதேசத்தினரைத் திரட்டி, குறிப்பாகக் கோயில்களை உளவு பார்க்க அவர்களுக்கு உத்தரவிட்டிருந்தார். டெல்லி சாந்தினி சவுக்கில் உள்ள கவுரி சங்கர் கோயில் மற்றும் கல்காஜி கோயில்களை உளவு பார்க்க லோன் உத்தரவிட்டது விசாரணையில் உறுதியானது.நேபாளத்தில் இருந்து செயல்பட்டு வந்த லோன், தனது கூட்டாளிகளின் கைதால் அதிர்ச்சியடைந்து, நிலைமையைச் சீரமைக்க இந்தியாவுக்குள் நுழைய முயன்றுள்ளார். இதை கண்காணித்து வந்த டெல்லி போலீஸின் சிறப்புப் படையினர் காசிப்பூரில் வைத்து அவரை கைது செய்துள்ளனர். இதன் மூலம் மிகப்பெரிய அளவிலான தீவிரவாத தாக்குதல் முறியடிக்கப்பட்டுள்ளது.

## காவல் நிலையத்தில் வெடி விபத்து: 4 ஆந்திர போலீஸார் படுகாயம்

**விஜயவாடா: ஏப்,01**

ஆந்திர காவல் நிலையத்தில் பறிமுதல் செய்யப்பட்ட வெடிமருந்து வெடித்ததில் 4 போலீஸார் படுகாயம் அடைந்தனர்.ஆந்திர மாநிலம், கிருஷ்ணா மாவட்டம் சல்லிபல்லி பகுதியில் காவல் நிலையம் உள்ளது. இங்குள்ள போலீஸார் நேற்று சட்டவிரோதமாக வெடிமருந்து விற்கப்படுவதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் ஓரிடத்தில் சோதனை நடத்தி, வெடிமருந்துகளை பறிமுதல் செய்தனர். இதையடுத்து அவற்றை ஒரு ஜீப்பில் காவல் நிலையம் கொண்டு வந்து பத்திரப்படுத்த முயன்றனர்.அப்போது திடீரென வெடிமருந்து பயங்கர சத்தத்துடன் வெடித்ததில் சப் இன்ஸ்பெக்டர், ஜீப் ஓட்டுநர் மற்றும் 2 கான்ஸ்டபிள்கள் படுகாயம் அடைந்தனர். மேலும் காவல் நிலையத்தில் இருந்த மேஜை, நாற்காலிகள், ஜன்னல் கண்ணாடிகள், வெளியில் இருந்த போலீஸ் வாகனம் போன்றவை சேதம் அடைந்தன.இந்த சம்பவத்தில் காயமடைந்த போலீஸார் விஜயவாடாவில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதில் சப்-இன்ஸ்பெக்டரின் நிலைமை மோசமாக இருப்பதாக கூறப்படுகிறது. இந்த சம்பவம் தொடர்பாக உள்துறை அமைச்சர் அனிதா விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார்.


# “நெல்லை தொகுதியை விட்டுக்கொடுத்தது ஏன்?” நயினார் நாகேந்திரன் பதில்

**சென்னை:ஏப்,01**

“சட்டப்பேரவைத் தேர்தலில் நெல்லை தொகுதியை தான் விட்டுக் கொடுத்தது ஏன்” என பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, “அதிமுக கேட்டுக்கொண்டதால் நெல்லைக்கு பதில், சாத்தூரில் போட்டியிடுகிறேன். வேட்பாளர் பட்டியல் அறிவித்தவுடன் சாத்தூர் தொகுதியில் வேட்புமனு தாக்கல் செய்வேன். எந்த தொகுதிக்குச் சென்றாலும், தமிழகம் முழுவதும் மக்கள் பணி தொடரும்.நெல்லைக்கு நான் எப்போதும் செல்லப்பிள்ளை தான். திமுகவை அகற்ற வேண்டும் என மக்கள் நினைத்துவிட்டனர். பாஜகவில் உள்ள தொண்டர்கள் எந்த எதிர்பார்ப்பும் இல்லாதவர்கள். நாட்டுக்காகவும், கொள்கைக்காகவும் தேசத்துக்காகவும் உழைக்கக் கூடியவர்கள். தொகுதி எண்ணிக்கை முக்கியமல்ல, மக்கள் எண்ணம் தான் முக்கியம். பாஜக வேட்பாளர்கள் வரும் 4-ம் தேதி வேட்புமனு தாக்கல் செய்வார்கள்.நாங்கள் இன்று மாலை திமுகவின் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யவிருக்கிறோம். திமுக கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை, தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டுள்ளது. பத்திரிக்கை சுதந்திரம் சரியில்லை. பிரதமர் மோடிக்கு திமுக நிர்வாகி ஒருவர் கொலை மிரட்டல் விடுக்கிறார். கடந்த கால திமுகவின் தேர்தல் அறிக்கை ஹீரோ மாதிரி, தற்போதைய திமுகவின் தேர்தல் அறிக்கை ஜீரோ. மதச்சார்பு, மதச்சார்பு என சொல்லும் திமுக, அனைத்து மதங்களுக்கும் நாங்கள் தான் பாதுகாப்பு என சொல்கிறது. ஆனால் மதம் சார்ந்து இருக்கிறது அவர்கள்தான். முதல்வர் ஸ்டாலின் தீபாவளிக்கு வாழ்த்துச் சொல்ல மாட்டார். கிறிஸ்துமஸுக்கு வாழ்த்து சொல்லுவார். ஆனால் நாங்கள் இஸ்லாமிய, கிறிஸ்துவ பண்டிகைகள் என அனைத்துக்கும் வாழ்த்து தெரிவிக்கிறோம்” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



## தாம்பரம் திமுகவில் அதிருப்தி: எஸ்.ஆர்.ராஜாவை சந்தித்தார் புதிய வேட்பாளர்



**தாம்பரம்: ஏப்,01**

தாம்பரம் தொகுதி வேட்பாளராக கிருத்திகா தேவி அறிவிக்கப்பட்டுள்ளதால், ஏற்கெனவே எம்எல்ஏ.வாக உள்ள எஸ்.ஆர்.ராஜா ஆதரவாளர்கள் மத்தியில் அதிருப்தி எழுந்துள்ளது. இந்நிலையில் எஸ்.ஆர். ராஜாவை புதிய வேட்பாளர் சந்தித்து வாழ்த்து பெற்றார் தமிழக சட்டப்பேரவை தேர்தலில் தாம்பரம் தொகுதியின் தற்போதைய எம்எல்ஏ.வாக உள்ள எஸ்.ஆர். ராஜாவுக்கு இம்முறை போட்டியிட சீட் வழங்கவில்லை. புதுமுகமான மருத்துவர் கிருத்திகா தேவிக்கு சீட் வழங்கப்பட்டுள்ளது. இதனால் அதிர்ச்சி அடைந்த எஸ்.ஆர்.ராஜா ஆதரவா ளர்கள் முற்றுகைப் போராட்டங்களில் ஈடுபட்டனர். இந்நிலையில், நேற்று தாம்பரம் வந்த ஆ.ராசா, எம்.பி., எம்எல்ஏ எஸ்.ஆர்.ராஜா மற்றும் அவரது ஆதரவாளர்களிடம் சமாதான பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது “தலைமை அறிவித்துள்ளதால் அனைவரும் ஒற்றுமையாக இருந்து கட்சி வேட்பாளரை வெற்றி பெறச் செய்ய வேண்டும்” என ஆ.ராசா அறிவுறுத்தினார்.அதன் பின்னர் எஸ்.ஆர்.ராஜா இல்லத்தில், புதிய வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள மருத்துவர் கிருத்திகா தேவி சந்தித்து வாழ்த்து பெற்றார். இதற்கிடையே எஸ்.ஆர். ராஜாவிடம் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பேசி, ‘நான் நிறுத்திய வேட்பாளரை நீங்கள் ஆதரித்து வெற்றி பெறச் செய்ய வேண்டும்’ என கேட்டுக் கொண்டதாக கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இருப்பினும், இந்த விவகாரம் தாம்பரம் திமுகவினரிடம் நீறு பூத்த நெருப்பாகவே இருந்து வருகிறது. இதனை அதிமுகவினர் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்தி காய் நகர்த்தி வருகின்றனர்.

## ரேஷன் கடைகளில் மது விற்பனை சுயேச்சை வேட்பாளர் வாக்குறுதி



**திருத்தணி: ஏப்,01**

திருத்தணி சட்டப்பேரவை தொகுதியில் சுயேச்சையாக போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்ய ஆர்.கே.பேட்டை ஊராட்சி ஒன்றியம், வீரமங்கலம் பகுதியை சேர்ந்த எஸ்.சேட்டு, திருத்தணி கோட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் வேட்புமனு தாக்கல் செய்தார். பிறகு, அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: ரூ.25 ஆயிரத்துக்கு மேல் மாத ஊதியம் பெறும் மத்திய, மாநில அரசு ஊழியர்களின் குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்படும் இலவசம் மற்றும் மானியத்தை ரத்து செய்ய பரிந்துரைக்கப்படும். 99 நாட்களில் அரசு கஜானா நிரப்பப்படும்.ரேஷன் கடைகளில் மதுவிற்பனை செய்யப்படும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## திருச்சி திருவெறும்பூர் அருகே திமுக கவுன்சிலர் மர்ம கும்பலால் படுகொலை



**திருச்சி: ஏப்,01**

திருவெறும்பூர் அருகே திமுக கவுன்சிலர் கொலை செய்யப்பட்டது சம்பவம் குறித்து போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். கொலையாளிகளை பிடிக்க 8 தனிப்படைகள் அமைக்கப்பட்டுள்ளன. திருச்சியை அடுத்த திருவெறும்பூர் அருகேயுள்ள கூத்தைப்பார் பேரூராட்சிக்கு உட்பட்ட பாரதிபுரத்தைச் சேர்ந்தவர் அந்தோணிசாமி மகன் ரஞ்சித்குமார் (38). திமுக இளைஞரணியில் கூத்தைப்பார் பேரூர் செயலாளராகவும், பேரூராட்சி 11-வது வார்டு கவுன்சிலராகவும் இருந்தார்.மேலும், திருவெறும்பூர் அரசு ஐடிஐ எதிரே உள்ள டாஸ்மாக் கடையில் பார் நடத்தி வந்தார். இந்நிலையில், திருவெறும்பூரில் இருந்து நவல்பட்டு செல்லும் சாலையில் புதுத் தெரு பகுதியில் ரஞ்சித்குமார் நேற்று முன்தினம் இரவு வெட்டிக் கொலை செய்யப்பட்டு கிடந்தார்.தகவலறிந்து நவல்பட்டு போலீஸார் அங்கு சென்று ரஞ்சித்குமார் உடலை மீட்டு, பரிசோதனைக்காக திருச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மாவட்ட எஸ்.பி. செல்வநாக ரத்தினம் சம்பவ இடத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தார். மோப்ப நாய் காவிரி வரவழைக்கப்பட்டு போலீஸார் சோதனை நடத்தினர். மேலும், தடயவியல் நிபுணர்களும் ஆய்வு செய்தனர்.அப்பகுதியில் உள்ள சிசிடிவி கேமரா பதிவுகளை போலீஸார் ஆய்வு செய்ததில், 3 இருசக்கர வாகனங்களில் வந்த 9 பேர், ரஞ்சித்கு மாரை வெட்டிக் கொன்றதும், அதில் இருந்த பலரும் சிறார் போன்று இருந்ததும் தெரிய வந்தது.இதுகுறித்து போலீஸார் வழக்குப் பதிவு செய்து கொலைக்கான காரணம் குறித்து விசாரித்து வருகின்றனர்.மேலும், 8 தனிப்படைகள் அமைக்கப்பட்டு, கொலையாளிகளை தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. கொல்லப்பட்ட ரஞ்சித்குமாருக்கு மனைவி, 2 மகள்கள், ஒரு மகன் உள்ளார்.

## ஹெலிகாப்டர் உள்பட 13 அனுமதிகளுக்கு சுவிதா இணையம் மூலமாக விண்ணப்பிக்கலாம்: தலைமைத் தேர்தல் அதிகாரி தகவல்

**சென்னை: ஏப்,01**

ஹெலிகாப்டர் மற்றும் ஹெலிபேட் அனுமதி உள்பட 13 அனுமதிகளுக்கு சுவிதா இணையதளம் மூலமாக 48 மணி நேரத்துக்கு முன்பாக விண்ணப்பிக்கலாம் என தமிழக தலைமைத்தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.இது குறித்து, அவர் நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பு: இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் பின்வரும் அனுமதிகளுக்காக விண்ணப்பிக்கும் போது, சுவிதா( Suvidha) என்ற இணையதளம் மூலமாக மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும். இத்தகைய விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட சட்டபேரவைத் தொகுதியின் தேர்தல் நடத்தும் அலுவலர் அலுவலகத்தில் 24 மணி நேரத்துக்குள் பரிசீலனை செய்யப்பட்டு தீர்வு காணப்படும்.இது தொடர்பாக, அங்கீகரிக்கப்பட்ட மற்றும் பதிவு செய்யப்பட்ட அனைத்து அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள் மற்றும் அவர்களின் பிரதிநிதிகள் தகுதியுள்ள அதிகாரிகளிடம் ஒப்புதல் பெறுவதற்காக, நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் சுவிதா இணையதளம் வழியாக பின்வரும் அனுமதிகளுக்கு விண்ணப்பிக்கலாம். ஹெலிகாப்டர் மற்றும் ஹெலிபேட் (தரையிறங்கு தளம்) பயன்படுத்துவதற்கான அனுமதி, தற்காலிக கட்சி அலுவலகம் திறப்பு, ஒலிபெருக்கியுடன் கூடிய கூட்டம் நடத்துவதற்கான அனுமதி, ஒலிபெருக்கி இல்லாத கூட்டம் நடத்துவதற்கான அனுமதி, ஒலிபெருக்கியுடன் தெருமுனை கூட்டம் நடத்துவதற்கான அனுமதி, ஒலிபெருக்கியுடன் ஊர்வலம் நடத்துவதற்கான அனுமதி, பேரணி நடத்துவதற்கான அனுமதி, வீதி உலா (ரோடு ஷோ) நடத்துவதற்கான அனுமதி, சுவரொட்டிகள், விளம்பரப் பலகைகள் மற்றும் ஒற்றை தூண் விளம்பரப் பலகை காட்சிப்படுத்துவதற்கான அனுமதி, வாகன அனுமதி, ஒலிபெருக்கியுடன் கூடிய வாகன அனுமதி, மேடை தடுப்புகள் அமைப்பதற்கான அனுமதி ஆகியவற்றுக்கு விண்ணப்பிக்கலாம்.அனுமதி கோரும் அரசியல் கட்சி, வேட்பாளர், நிகழ்வு நடப்பதற்கு குறைந்தது 48 மணி நேரத்துக்குமுன்னதாக, தேர்தல் செலவினக் கண்காணிப்பு குறித்த சமீபத்திய அறிவுறுத்தல்களின் தொகுப்பில் கொடுக்கப்பட்டுள்ள ‘இணைப்பு – டி1’ படிவத்தில், செலவினத் திட்ட விவரங்களுடன் சம்பந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் அலுவலகத்திலுள்ள அனுமதி பிரிவுக்கு பொறுப்பான அலுவலரிடம் விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பங்களை தகுதியுள்ள அதிகாரிகள் குறித்த நேரத்தில் சீராக பரிசீலனை செய்ய ஏதுவாக (முன்மொழியப்பட்ட) செயல்பாடுகளின் தேதி, இடம் மற்றும் நேரம் உள்ளிட்ட அனைத்துத் தகவல்களும் முழுமையாகவும், சரியாகவும் இருப்பதை அரசியல் கட்சிகளும் வேட்பாளர்களும் உறுதி செய்ய வேண்டும்.சுவிதா இணையதளத்தை suvidha.eci.gov.in என்ற முகவரியில் அணுகலாம். ஏதேனும் சந்தேகங்கள் இருந்தால், அரசியல் கட்சிகள் உதவிக்காக அந்தந்த மாவட்ட தேர்தல் அலுவலர், தேர்தல் நடத்தும் அலுவலரைத் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### டேராடுனில் உள்ள இராஷ்ட்ரிய இந்திய இராணுவக் கல்லூரியில்

# 8ம் வகுப்பில் மாணவர்கள் சேருவதற்கான தேர்வு நடைபெறவுள்ளது

## பெரம்பலூர் கலெக்டர் தகவல்



பெரம்பலூர்,ஏப்.01

டேராடுனில் உள்ள இராஷ்ட்ரிய இந்திய இராணுவக் கல்லூரியில் ஜனவரி – 2027 பருவத்தில் எட்டாம் வகுப்பில் மாணவர்கள்(சிறுவர்கள் மற்றும் சிறுமியர்கள்) சேருவதற்கான இத்தேர்விற்கு மாணவ, மாணவியர்கள் 01.01.2027 அன்று 11 ½ முதல் 13 வயதிற்குட்பட்டவராக (02.01.2014க்கு பிறகு, 01.07.2015க்கு முன்பு பிறந்திருந்தல் வேண்டும்). மேலும் 01.01.2027 அன்று அங்கீகரிக்கப்பட்ட பள்ளியில் ஏழாம் வகுப்பு படிப்பவராகவோ அல்லது ஏழாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவராகவோ உள்ள மாணவ, மாணவியர்கள் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரர்களின் பெற்றோர் அல்லது பாதுகாப்பாளர் தமிழ்நாட்டில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

இச்சேர்க்கைக்கான விண்ணப்பப்படிவம், தகவல் தொகுப்பேடு மற்றும் முந்தைய தேர்விற்கான வினாத்தாள் தொகுப்பை அஞ்சலில் பெற கட்டணமாக பொதுப்பிரிவினர் ரூ.600/க்கும், பட்டியல் மற்றும் பழங்குடி வகுப்பினர் சாதிச்சான்றுடன் ரூ.555/க்கும், "THE COMMANDANT, RIMC FUND", DRAWEE BRANCH, HDFC BANK, BALLUPUR CHOWK, DEHRADUN(BANK CODE 1399) UTTARAKHANDல் மாற்றத்தக்க வகையில் வங்கி வரைவோலை எடுத்து The Commandant, Rashtriya Indian Military College, Garhi Cantt, Dehradun, Uttrakhand, Pin248 003 என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம் அல்லது www.rimc.gov.in என்ற இணையவழி மூலமாகவும் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் (இரட்டிப்பு படியுடன்) தேர்வுக் கட்டுபாட்டு அலுவலர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்,

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையச் சாலை, பூங்கா நகர், சென்னை600 003 என்ற முகவரிக்கு 05.04.2026 அன்று மாலை 05.45 மணிக்குள் கிடைக்குமாறு அனுப்ப வேண்டும். கூடுதல்,

விவரங்களை www.rimc.gov.in என்ற இணையதளத்தின் வாயிலாக அறியலாம். என மாவட்ட ஆட்சித்தலைவர் மிருணாளினி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# தென்காசி கொடிக்குறிச்சி ஸ்ரீராம் நல்லமணி யாதவா கல்லூரி வாக்கு எண்ணிக்கை மையத்தில் கலெக்டர் ஆய்வு



தென்காசி, ஏப். 01

தென்காசி மாவட்டம் கொடிக்குறிச்சி ஸ்ரீராம் நல்லமணி யாதவா கல்லூரி வாக்கு எண்ணிக்கை மையத்தில் நேற்று (31.03.2026) நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல்2026 ஐ முன்னிட்டு 5 சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்கு எண்ணிக்கை மையத்திற்கு செல்லும் வழித்தடங்கள் மற்றும் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்வது குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல் கிஷோர். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அ.மயில்வாகனன் முன்னிலையில் கள ஆய்வு மேற்கொண்டார்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 ஐ முன்னிட்டு 219 சங்கரன்கோவில் (தனி), 220வாசுதேவநல்லூர் (தனி), 221 கடையநல்லூர், 222 தென்காசி, 223 ஆலங்குளம் ஆகிய 5 சட்டமன்ற தொகுதிகளுக்கான தேர்தல் 23.04.2026 அன்று நடைபெற்று முடிந்தவுடன் பாதுகாப்பாக மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை வாக்கு எண்ணிக்கை மையத்திற்கு செல்லும் வழித்தடங்கள், அந்தந்த சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்கு எண்ணிக்கை நடைபெறும் இடம், தபால் ஓட்டு வைப்பறை, மாவட்ட கட்டுப்பாட்டு மையம் (Strong Room) மற்றும் பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளின் பணிகள் மேற்கொள்வது குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர் /மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல் கிஷோர் அலுவலர்களுக்கு ஆலோசனைகள் வழங்கினார். இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன், தேர்தல் ராமச்சந்திரன், நடத்தும் அலுவலர்கள் வைஷ்ணவிபால், ராஜேந்திரன், பால்துரை, அனிதா, செயற்பொறியாளர் (பொதுப்பணித்துறை, கட்டடம்) அனிட்டா சாந்தி, உதவி இயக்குநர் (நில அளவை) ஜாஹிர் உசேன் மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள், அரசு அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.



புதுச்சேரி, மணவெளி தொகுதிக்கு தமிழக வெற்றி கழகம் சார்பில் போட்டியிடும் வேட்பாளர் ராமு, தொகுதி முழுவதும் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். வாக்குகள் சேகரிக்கும் போது கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



புதுச்சேரி, ராஜ்பவன் சட்டமன்ற தொகுதிக்கு பா.ஜ.க. சார்பில் போட்டியிடும் வேட்பாளர் வி.பி. ராமலிங்கம், அவர்களை ஆதரித்து தமிழ்நாடு முன்னாள் பாஜக தலைவர் அண்ணாமலை, தீவிர பிரச்சாரம் மேற்கொண்டார்.

# ராமநாதபுரம் தொண்டியில் உயர்கல்வி வழிகாட்டல் முகாம்



பரமக்குடி, ஏப். 01

தமிழ்நாடு அறிவியல் இயக்கம், இராமநாதபுரம் மாவட்டம் மற்றும் அழகப்பா பல்கலைக்கழக கடலியல் மற்றும் கடலோரவியல் துறை இணைந்து நடத்தும் உயர்கல்வி வழிகாட்டல் முகாம் தொண்டி தனியார் மகாலில் நடைபெற்றது. முகாமிற்கு தொண்டி அழகப்பா பல்கலைக்கழக கடலியல் மற்றும் கடலோரவியல் துறைத் தலைவர் ரவிக்குமார் தலைமை வகித்தார். தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்டத் தலைவர் ஜெ.ஜே.லியோன், திருவாடானை தனபால் முன்னிலை வகித்தனர். தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்ட செயலாளர் ஜீவானந்தம் வரவேற்றுப் பேசினார்.கல்லல் வட்டாரக் கல்வி அலுவலர் ஜோசப் ஆண்டோ ரெக்ஸ், பணி நிறைவு தலைமையாசிரியர் மாணிக்கம் வாழ்த்துரை வழங்கினர். சிவகங்கை மாவட்ட அரசு மாதிரிப்பள்ளி தலைமையாசிரியர் காளிதாஸ், இராமநாதபுரம் மாவட்ட அரசு மாதிரிப் பள்ளி ஆசிரியர் முத்துகுமார் மாணவர்களுக்கான வழிகாட்டல் முகாமை வழிநடத்தி, மாணவர்களின் சந்தேகங்களுக்கு விளக்கம் அளித்தனர். தமிழ்நாடு அறிவியல் இயக்க மாநில துணைத் தலைவர் காந்தி நிறைவுரை வழங்கினார். நிறைவாக, தமிழ்நாடு அறிவியல் இயக்க திருவாடானை வட்டாரச் செயலாளர் போது ராஜா நன்றி கூறினார். மாவட்ட நிர்வாகி பிரியங்கா நிகழ்வுகளை தொகுத்து வழங்கினார். முகாமில் 200க்கும் மேற்பட்ட 10,11,12 வகுப்பு மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர். அனைவருக்கும் பைல், நோட்டு, பேனா, குளிர்பானம் வழங்கப்பட்டது. நிகழ்வுக்கான ஏற்பாடுகளை மாவட்ட நிர்வாகி கள் நவனீதகிருஷ்ணன், கணேசன், பரமேஸ்வரன், வின்சென்ட் வீரு, சசிக்குமார், ஜெரோம், கல்பனா மற்றும் திருவாடானை கிளை நிர்வாகிகள் காளிமுத்து, ஜெகதீஷ் குமார், தமிழரசி போன்றோர் செய்திருந்தனர்.

# திருவண்ணாமலை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் கலெக்டர் ஆய்வு



திருவண்ணாமலை, ஏப். 1

திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு திருவண்ணாமலை மாநகராட்சி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் உள்ள வாக்கு எண்ணுகை மையத்தில் தேர்தல் முன்னேற்பாடு பணிகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 வரும் 23.04.2026 அன்று நடைபெறவுள்ளதை முன்னிட்டு தேர்தல் நடத்துவதற்கான முன்னேற்பாடு பணிகள் நடைபெற்று வருகிறது. அதன்படி திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருவண்ணாமலை, கீழ்பென்னாத்தூர், செங்கம், கலசபாக்கம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளின் வாக்கு எண்ணும் மையமான திருவண்ணாமலை மாநகராட்சி ஒழுங்குமுறை விற்பனை கூட்டத்தில் உள்ள வாக்கு எண்ணுகை மையத்தில் உள்ள வாக்கு இயந்திரங்கள் வைக்கப்படவுள்ள பாதுகாப்பு அறை மற்றும் அஞ்சல் வாக்கு வைப்பறை குறித்தும் வாக்கு எண்ணும் நாளில் அலுவலர்கள், முகவர்கள் மற்றும் வேட்பாளர்களுக்குத் தேவையான குடிநீர், கழிவறை, மின்சாரம் மற்றும் இதர வசதிகள் குறித்தும், தேர்தல் ஆணையத்திற்கு உடனுக்குடன் முடிவுகளைத் தெரிவிக்கத் தேவையான இணையதள வசதி மற்றும் கணினி அறைகள் குறித்தும், வாக்கு எண்ணும் மையத்தைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு சிசிடிவி (CCTV) கேமராக்களின் செயல்பாடுகள் குறித்தும், அவசர கால நிலையைச் சமாளிக்கத் தேவையான தீயணைப்பு கருவிகள் தயார்நிலையில் இருப்பது குறித்தும் ஆய்வு மேற்கொண்டார்.

முன்னதாக திருவண்ணாமலை மாநகராட்சியில் உள்ள பச்சையப்பாஸ் சில்க்ஸ் வளாகத்தில் வாக்காளர்கள் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் வாடியக்கையாளர்களுக்கு வழங்கும் இரசீதில் வாக்காளர் விழிப்புணர்வு வாசகங்களை முத்திரையிட்டு வழங்கினார்.

இந்நிகழ்வில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் முனைவர். ம. சுதாகர், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.இராம்பிரதீபன், திருவண்ணாமலை சட்டமன்ற தேர்தல் நடத்தும் அலுலவர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் செல்வம், மாநகராட்சி ஆணையர் செல்வபாலாஜி, தேர்தல் நடத்தும் அலுவலர்கள், திருவண்ணாமலை வட்டாட்சியர் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.



வேலூர் திமுக பொதுச் செயலாளர், நீர்வளம், சட்டமன்றம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகனை மதச்சார்பற்ற கூட்டணியைச் சேர்ந்த தே.மு.தி.க. கட்சியின் பொருளாளர் மாநிலங்களவை உறுப்பினர் L.K. சுதீஷ், காட்பாடி இல்லத்தில் மரியாதை நிமித்தமாக நேரில் சந்தித்து காட்பாடி சட்டமன்ற தொகுதியின் வேட்பாளராக போட்டியிடுவதை முன்னிட்டு வாழ்த்துக்கள் தெரிவித்தார். இந்நிகழ்வின்போது அவரை வேலூர் வடக்கு மாவட்ட பொறுப்பாளரும், வேலூர் மக்களவை உறுப்பினருமான D.M. கதிர் ஆனந்த், பொன்னாடை அணிவித்து வரவேற்றார். பின்னர் வேலூர் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் கள செயல்பாடுகள் மற்றும் மாநில அளவிலான பரப்புரை சார்ந்த முன்னெடுப்புகள் குறித்து பரஸ்பரம் கலந்துரையாடினர்.

# கல்லங்குறிச்சி கலியுக ஸ்ரீ வரதராசப் பெருமாள் கோயில் திருவிழா: கொடியேற்றத்துடன் தொடக்கம்



அரியலூர்,

அரியலூர் அருகிலுள்ள கல்லங்குறிச்சி கிராமத்தில் எழுந்தருளி அருள் பாலித்து வரும் கலியுக ஸ்ரீ வரதராசப் பெருமாள் கோயிலின் ஆண்டு பெருந்திருவிழா கொடியேற்ற நிகழ்வுடன் சிறப்பாக தொடங்கியது.

உலகப் பிரசித்தி பெற்ற இக்கோயிலின் திருவிழா ஆண்டுதோறும் இராம நவமி தினத்தை முன்னிட்டு கொடியேற்றத்துடன் தொடங்கி, தொடர்ந்து 10 நாட்கள் விமரிசையாக நடைபெறுவது வழக்கம்.

அதன்படி, இந்த ஆண்டிற்கான திருவிழாவும் நேற்று காலை நடைபெற்ற புனித கொடியேற்ற நிகழ்வுடன் துவங்கியது.

கொடியேற்ற நிகழ்வில், கலியுக ஸ்ரீ வரதராசப் பெருமாள், ஸ்ரீதேவி, பூதேவி சமேதமாக அலங்கரிக்கப்பட்டு பக்தர்களுக்கு அருள்பாலித்தனர்.

பின்னர், கோயில் முன்பகுதியில் உள்ள கொடிக்கம்பத்தில் சிறப்பு யாகங்கள், பூஜைகள் நடைபெற்றன. தொடர்ந்து தீபாராதனை காண்பிக்கப்பட்டு, கருடன் உருவம் பொறிக்கப்பட்ட திருக்கொடியை பட்டாச்சாரியார்கள் வேதமந்திரங்கள் முழங்க ஏற்றி வைபவத்தை நடத்தினர்.

இந்த நிகழ்வில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு பக்தி பரவசத்துடன் தரிசனம் செய்தனர். திருவிழாவை முன்னிட்டு அடுத்த 10 நாட்களும் பெருமாள் பல்வேறு வாகனங்களில் எழுந்தருளி, திருவீதிகளில் ஊர்வலமாக வந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார். தினமும் கோயில் மண்டபத்தில் சமய சொற்பொழிவுகள், இன்னிசை கச்சேரிகள், நாதஸ்வர இசை நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன.

விழாவின் முக்கிய நிகழ்வுகளாக, மார்ச் 31 ஆம் தேதி நடைபெறும் 5ஆம் நாள் திருவிழாவில் கருட சேவை, ஏப்ரல் 2 ஆம் தேதி திருக்கல்யாணம் (கண்ணாடி பல்லாக்கு), ஏப்ரல் 4 ஆம் தேதி தேரோட்டம், ஏப்ரல் 5 ஆம் தேதி ஏகாந்த சேவை ஆகியவை நடைபெறவுள்ளன.

திருவிழா ஏற்பாடுகளை கோயில் ஆதீன பரம்பரை தர்மகர்த்தாக்கள் கமலா ராமச்சந்திரன் படையாச்சியார், கோ. ராமதாஸ் படையாச்சியார், கோ. வெங்கடாஜலபதி படையாச்சியார், இராம. வரதராஜ் படையாட்சியார் குடும்பத்தினர் சிறப்பாக மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த திருவிழாவை முன்னிட்டு, தினந்தோறும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பல்வேறு மாவட்டங்களில் இருந்து கல்லங்குறிச்சி வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனை கருத்தில் கொண்டு, திருச்சி மற்றும் அரியலூர் பகுதிகளில் இருந்து சிறப்பு பேருந்து சேவைகள் இயக்கப்படுகின்றன. மக்கள் திரளாக கலந்து கொண்டு, பக்தி உணர்வுடன் விழாவை சிறப்பித்து வருகின்றனர்.



தஞ்சாவூர் மாவட்டம் சிவகங்கை பூங்காவில் 2026 சட்டமன்ற பொது தேர்தலை முன்னிட்டு தேர்தல் திருவிழாதமிழ்நாட்டின் பெருவிழா என்னும் 100 சதவீதம் வாக்களிக்க வலியுறுத்தி மல்லர் கம்பம் உடல் வித்தை விழிப்புணர்வு நிகழ்ச்சியினை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட் கலெக்டர் பா.பிரியங்கா பங்கஜம் துவக்கி வைத்து பார்வையிட்டார். மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன் மற்றும் பலர் உடன் உள்ளனர்.

# வாக்குப்பதிவு நாளன்று மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து முதற்கட்ட பயிற்சி வகுப்பு: மாவட்ட தேர்தல் அலுவலர் / கலெக்டர் ஆய்வு



ஊட்டி,

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல், 2026 ஐ முன்னிட்டு, வாக்குச்சாவடி தலைமை அலுவலர்கள் மற்றும் வாக்குச்சாவடி அலுவலர்கள் வாக்குப்பதிவு நாளன்று மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து நடைபெற்ற முதற்கட்ட பயிற்சி வகுப்பினை, மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு நேரில் பார்வையிட்டு, அறிவுரைகளை வழங்கினார்.

பின்னர், மாவட்ட தேர்தல் அலுவலர் /மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் 2026 நடத்தை விதிமுறைகள் நடைமுறைக்கு வந்துள்ளதை அடுத்து, 108உதகை சட்டமன்ற தொகுதி ரெக்ஸ் மேல்நிலைப்பள்ளியிலும், 110 குன்னூர் சட்டமன்ற தொகுதி ஜோசப் மேல்நிலைப்பள்ளியிலும், 109 கூடலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மார்னிங் ஸ்டார் மேல்நிலைப்பள்ளியிலும், ஏப்ரல் 2026 வாக்குப்பதிவு நாளன்று 736 வாக்குச்சாவடி மையங்களில் பணியாற்றவுள்ள 3,532 வாக்குச்சாவடி தலைமை அலுவலர்கள் மற்றும் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு வாக்குப்பதிவு நாளன்று மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து முதற்கட்ட பயிற்சி வகுப்பு நடைபெற்று வருகிறது. இப்பயிற்சி வகுப்பில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தின் செயல்முறை விளக்கம், வாக்குச்சாவடி அலுவலர்களின் பொறுப்புகள், டெண்டர் வாக்கு ஆகியவற்றை குறித்து நன்றாக தெரிந்து வைத்திருக்க வேண்டும் எனவும் வாக்குப்பதிவு முந்தைய நாள் மேற்கொள்ள வேண்டிய பணிகள், வாக்குப்பதிவு முடிந்த பின் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்தும், மாதிரி வாக்குப்பதிவுகள் முடிந்த பின் பின்பற்ற வேண்டிய பணிகள் குறித்து நன்றாக தெரிந்திருக்க வேண்டும். இப்பயிற்சியில் ஏதேனும் சந்தேகங்கள் இருக்கும் பட்சத்தில் அதனை கேட்டு தெரிந்து கொள்வதோடு மட்டுமின்றி, தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள வழிமுறைகள் அனைத்தையும், தேர்தல் பணியில் ரூடவ்டுபட்டுள்ள அனைத்து அலுவலர்களும் பின்பற்ற வேண்டும். மேலும், வாக்குப்பதிவு நாளன்று எவ்வித பதற்றமில்லாமல் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பணிகளை சிறப்பாக மேற்கொள்ள வேண்டும் எனவும், வாக்குப்பதிவு நாளன்று ஏதேனும் இடையுறுகள் இருக்கும் பட்சத்தில் உடனடியாக மண்டல அலுவலர்களிடம் தெரிவிக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தி, தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் 2026 தேர்தல் பணியில் ஈடுபடவுள்ள அனைவரும் சிறப்பாக பணிகளை மேற்கொள்ள எனது வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறேன் என மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட கலெக்டர் தெரிவித்தார்

# திருப்பத்தூரில் அமமுக வேட்பாளருடன் முன்னாள் அமைச்சர் கே.சி. வீரமணி புரட்சித்தலைவர் அவர்களின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை.



திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதியின் அதிமுக கூட்டணி கட்சியின் வேட்பாளாராக அமமுக கட்சியின் அ. ஞானசேகரன் போட்டியிடுகிறார்.

இதனையெடுத்து இன்று திருப்பத்தூர் புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள புரட்சித்தலைவர் எம். ஜி. ஆர் அவர்களின் திருவருவ சிலைக்கு திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதியின் அமமுக வேட்பாளர் ஞானசேகருடன் முன்னாள் அமைச்சர் கே.சி. வீரமணி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அப்போது முன்னாள் பாமக சட்டமன்ற உறுப்பினர் டி. கே. ராஜா,அதிமுக, பாமக, பாஜக உள்ளிட்ட கூட்டணி கட்சிகளை சேர்ந்த ஏராளமனோர் கட்சியின் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

# கந்திலி ஒன்றியம் பெரிய கண்ணால பட்டி ஊராட்சி ராஜாவூர் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் ஆண்டு விழா



திருப்பத்தூர் மாவட்டம் கந்திலி ஒன்றியம் பெரிய கண்ணால பட்டி ஊராட்சி ராஜாவூர் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் இன்று ஆண்டு விழா மிகவும் சீரும் சிறப்புமாக நடைபெற்றது இவ்விழாவில் மாணவர்களின் அனைத்து திறமை ᶻஎடுத்துரைக்கப்பட்டன மாணவர்களின் தனித்திறமைகள் வெளிப்படுத்தப்பட்டன இவ்விழாவில் தலைமை ஆசிரியர் நல்லாசிரியர் இன்று அவர்கள் மாணவர்கள் அனைவரையும் பாராட்டியும் அவர்களுக்கு சிறப்பு பரிசுகள் அளித்தும் கலைத் திருவிழாவில் முதலிடம் பெற்ற மாணவர்களுக்கும் சிறப்பு பரிசு அளித்தார் உதவி ஆசிரியர் பூங்கோதை வரவேற்புரை ஆற்றினார் பள்ளி மாணவர்கள் நடனமாடியும் திருக்குறள் கூறியும் வாய்ப்பாடுகள் கூறியும் பாடல்கள் கூறியும் கதைகள் கூறியும் சுற்றுச்சூழலை பற்றிய விழிப்புணர்வு பற்றி ஆங்கிலத்திலும் தமிழிலும் பேசி அசத்தி காட்டினர் நாடகம் நடித்துக் காட்டினர் மாணவர்களு டைய திறமைகள் அனைத்தும் வெளிப்படுத்த ப்பட்டன மாணவர்கள் அனைவரையும் பாராட்டி மாணவர்கள் அனைவருக்கும் சிறப்பு பரிசுகள் அளிக்கப்பட்டு மதிய உணவு அதாவது அறுசுவை உணவு மாணவர்களுக்கு வழங்கப்பட்டது இனிப்புகள் வழங்கப்பட்டது உதவி ஆசிரியர் சரளா நன்றி கூறினார் .

# ஏர் கலப்பை மற்றும் வெற்றி வேலுடன் ஊர்வலமாக வந்து வேட்புமனு தாக்கல் செய்த நாம் தமிழர் கட்சி வேட்பாளர்



தமிழகத்தில் சட்டமன்ற தேர்தல் களம் சூடு பிடித்து உள்ள நிலையில் அனைத்து கட்சிகளும் தமிழகம் முழுவதும் வேட்புமனு தாக்கல் செய்து வருகின்றனர்.

மேலும் வேட்பு மனு தாக்கல் நாளான இன்று 30 ஆம் தேதி தொடங்கி ஏப்ரல் ஆறாம் தேதி வரை நடைபெற உள்ளது.

இந்த நிலையில் திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதியின் நாம் தமிழர் கட்சி வேட்பாளர் ஆறுமுகம் ஏற்கனவே அனல் பறக்கும் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறார்.

இந்த நிலையில் வேட்பு மனு தாக்கல் செய்ய தனது தொண்டர்களுடன் ஏர்கலப்பையை தோளில் சுமந்து கொண்டு மேலும் வெற்றி வேலுடன் மயிலாட்டம் ஒயிலாட்டம் ஆடி ஊர்வலமாக வந்து கோட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் அதிகாரி வரதராஜனிடம் வேட்பு மனு அளித்தார்.

மேலும் இந்திய அரசின் அமைப்பின்பால் நாம் தமிழர் கட்சி சார்பில் திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதிக்கு வேட்பாளராக நிற்கிறேன் எனக்கூறி உறுதிமொழியும் எடுத்துக்கொண்டார்.

# கென்யாவில் வெள்ளம்; பலி எண்ணிக்கை 108 ஆக உயர்வு



நைரோபி,

ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றான கென்யாவில் இந்த மாத தொடக்கத்தில் கனமழை பெய்தது. தொடர்ந்து பெய்த கனமழையால், நகரம் முழுவதும் வெள்ளக் காடானது.

பல்வேறு இடங்களிலும் நீர் சூழ்ந்தது. குடியிருப்புகள், கட்டிடங்கள் ஆகியவை நீரில் மூழ்கின. வாகனங்கள் வெள்ள நீரில் அடித்து செல்லப்பட்டன. மின் வினியோகம் தடைபட்டு, மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டது. விமானம் உள்ளிட்ட போக்குவரத்து சேவையும் கடுமையாக பாதிப்படைந்தது.

கனமழை மற்றும் வெள்ள பாதிப்புகளை அடுத்து, 2,700 குடும்பங்கள் பாதுகாப்பு தேடி வேறு பகுதிகளுக்கு சென்று விட்டன.

வெள்ள பாதிப்பில் சிக்கி இதுவரை 108 பேர் பலியாகி உள்ளனர். இதனை கென்ய தேசிய போலீசார் வெளியிட்ட தகவல் தெரிவிக்கின்றது. ஒரு சில பகுதிகளில் மழை ஓய்ந்தபோதும், கழிவுநீர் ஓடைகளில் இருந்து வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. தரை பகுதியை நீர் சூழ்ந்துள்ளது. இதனால் வெள்ளத்தின் பாதிப்பு தொடர்கிறது என்று மக்களுக்கு போலீசார் எச்சரிக்கை தெரிவித்து உள்ளனர்.

# இஸ்ரேல் ராணுவ தளங்கள் மீது ஹிஸ்புல்லா அமைப்பு தொடர்ச்சியாக தாக்குதல்



பெய்ரூட்,

ஈரான் நாட்டை அமெரிக்காவும், இஸ்ரேலும் கூட்டாக இணைந்து வான்வழியாக கடந்த பிப்ரவரி 28ந்தேதி கடுமையாக தாக்கின. இதில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளனர். ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி காமேனி, பாதுகாப்பு மந்திரி அமீர் நசீர்ஜடே மற்றும் புரட்சிகர காவல்படை தளபதி முகமது பாக்பூர் உள்ளிட்ட பல முக்கிய அதிகாரிகள், தலைவர்கள், தளபதிகள் அடுத்தடுத்து கொல்லப்பட்டனர். இதனை ஈரான் நாடும் உறுதி செய்துள்ளது. இதனால் மத்திய கிழக்கு பகுதியில் கடும் பதற்ற நிலை காணப்படுகிறது.

ஈரானுக்கு எதிராக அமெரிக்காவும், இஸ்ரேலும் நடத்தி வரும் தாக்குதலுக்கு ஈரானும் பதிலடி கொடுத்து வருகிறது. 4 வாரங்களாக நீடித்து வரும் இந்த மோதலில் ஈரானுக்கு ஆதரவாக லெபனானில் இருந்து ஹிஸ்புல்லா அமைப்பு செயல்பட்டது. இதனால், லெபனானையும் இஸ்ரேல் தாக்கியது. இடையில் ஹமாஸ் அமைப்பும் தாக்குதலை தொடுத்தது.

இந்த சூழலுக்கு இடையே, ஈரானுக்கு எதிரான அமெரிக்க இஸ்ரேலின் தாக்குதல் தொடர்ந்து அதிகரிக்கும் என்றால், நாங்கள் நேரடியாக ராணுவ மோதலில் ஈடுபட தயாராக இருக்கிறோம் என்று ஏமன் நாட்டிலுள்ள ஹவுதி கிளர்ச்சியாளர்கள் எச்சரிக்கை விடுத்தனர்.

இந்த சூழலில், இஸ்ரேலின் வடக்கே அல் மலிகியா பகுதியிலுள்ள வாகனங்கள் மற்றும் இஸ்ரேல் படையினர் மீது சால்வோஸ் ரக ராக்கெட்டுகளை ஏவி ஹிஸ்புல்லா அமைப்பு இன்று காலை தாக்குதல் நடத்தியுள்ளது. லெபனானில் இருந்து செயல்படும் அந்த அமைப்பு, இஸ்ரேலின் வடக்கே உள்ள சாபேத் நகரருகே இஸ்ரேல் ராணுவ தளங்கள் மீது தொடர்ச்சியாக தாக்குதல் நடத்தியுள்ளது. இதற்கு அந்த அமைப்பு பொறுப்பேற்று கொண்டுள்ளது.

தொடர்ந்து, சாபேத் நகரில் இருந்து சற்றே தொலைவிலுள்ள மஹவா ஆலன் ராணுவ தளம் மீதும் பெரியா தளத்தின் மீதும் ஏவுகணை தாக்குதல் நடத்தியுள்ளது. தெற்கு லெபனானின் டெய்ர் சிரியன் பகுதியில் இஸ்ரேலின் பீரங்கி படைகள் மீதும் தாக்குதல் நடத்தினோம் என்று ஹிஸ்புல்லா கூறியுள்ளது. இதனால், லெபனானில் எல்லை கடந்து தரை வழி தாக்குதலில் இஸ்ரேல் ஈடுபட்டு உள்ளது உறுதியாகி உள்ளது.

# வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு மாவட்ட தேர்தல் அலுவலர்/ கலெக்டர் நேரில் ஆய்வு



திருப்பூர்,

தமிழ்நாடு சட்டமன்றத் பொதுத்தேர்தல் 2026 முன்னிட்டு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட கலெக்டர் மனிஷ் நாரணவரே திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் மற்றும் உடுமலைப்பேட்டை சட்டமன்றத் தொகுதி வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

தமிழ்நாடு சட்டமன்றத் பொதுத்தேர்தல் 2026 முன்னிட்டு மடத்துக்கும் மற்றும் உடுமலைப்பேட்டை சட்டமன்றத் தொகுதி வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு காலை மற்றும் மாலை என வகுப்பு நடைபெறுகிறது. திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை ஸ்ரீ ஜி.வி.ஜி விசாலாட்சி மகளிர் கல்லூரியில் மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதி வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான காலை பயிற்சி வகுப்பில் வாக்கு சாவடி முதன்மை அலுவலர்கள், வாக்கு பதிவு அலுவலர் 1 என 984 அலுவலர்களுக்கும், மாலை பயிற்சி வகுப்பில் வாக்கு பதிவு அலுவலர் 2 மற்றும் 3 என 842 அலுவலர்களும், உடுமலைப்பேட்டை வித்யாசாகர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் காலை பயிற்சி வகுப்பில் வாக்கு சாவடி முதன்மை அலுவலர்கள், வாக்கு பதிவு அலுவலர் 1 என 706 அலுவலர்களுக்கும், மாலை பயிற்சி வகுப்பில் வாக்கு பதிவு அலுவலர் 2 மற்றும் 3 என 737 அலுவலர்களும் பயிற்சி வகுப்பு நடைபெறுகிறது.

இப்பயிற்சி வகுப்பில் வாக்குச்சாவடி மையம் ஏற்பாடுகள் மேற்கொள்ளுதல், வாக்குப்பதிவு இயந்திரம் சரிபார்த்தல், தேர்தல் தொடர்பான படிவங்களை எவ்வாறு பூர்த்தி செய்வது, மாதிரி வாக்குப்பதிவு மேற்கொள்ளுதல் தொடர்பாக தேர்தல் அலுவலர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

தொடர்ந்து, மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட கலெக்டர் மனிஷ் நாரணவரே மடத்துக்குளம் மற்றும் உடுமலைப்பேட்டை சட்டமன்றத் தொகுதி வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்வின் போது, உடுமலைப்பேட்டை வருவாய் கோட்டாட்சியர் குமார், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் சதீஸ் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.




# தேனியில் பாரதிய ஜனதா கட்சி அலுவலகத்தில் அம்மா மக்கள் முன்னேற்ற கழக வேட்பாளர் அறிமுக கூட்டம்

பாரதிய ஜனதா கட்சி தேனி மாவட்ட அலுவலகத்தில், மாவட்ட தலைவர் ராஜபாண்டியன், தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் போட்டியிடும் அம்மா மக்கள் முன்னேற்ற கழக வேட்பாளர் கதிர்காமுவை பெரியகுளம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பாரதிய ஜனதா கட்சி நிர்வாகிகள் மற்றும் பொறுப்பாளர்களுக்கு அறிமுகப்படுத்தினார். வரும் சட்டமன்றத் தேர்தலில் கூட்டணி வேட்பாளராக களம் இறங்கும் கதிர்காமுவுக்கு குக்கர் சின்னத்தில் வாக்கு சேகரிக்கவும் அவரை ஆதரிக்கவும் வேண்டும் என்று பாரதிய ஜனதா கட்சி சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் மாவட்ட தலைவர் ராஜபாண்டி எடுத்துரைத்தார். இந்த நிகழ்ச்சியில் வேட்பாளர் கதிர்காமு, அம்மா மக்கள் முன்னேற்ற கழக மாவட்ட செயலாளர் காசிமாயன் மற்றும் அம்மா மக்கள் முன்னேற்றக் கழக நிர்வாகிகள், அதிமுக பொறுப்பாளர்கள், பாரதிய ஜனதா கட்சி நிர்வாகிகள், பொறுப்பாளர்கள், உட்பட கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# கோவை ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை, அறிவியல் கல்லூரியில் ஒருநாள் கருத்தரங்கம்

**கோவை, ஏப். 01**

கோவை நவஇந்தியா பகுதியில் செயல்பட்டு வரும் ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை , அறிவியல் கல்லூரியின் அகமதிப்பீட்டுத் தர நிர்ணயக் குழு , ஒளிரும் கோவை தன்னார்வ அமைப்புடன் இணைந்து நடத்திய " கோயம்புத்தூரை உலகத் தர நகரமாக மாற்றுவோம் " என்ற தலைப்பிலான ஒரு நாள் கருத்தரங்கம் கல்லூரியின் கருத்தரங்க அறையில் நடைபெற்றது.

நிகழ்விற்கு, எஸ்.என். ஆர்.சன்ஸ் அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் சுந்தர் ராமகிருஷ்ணன் தலைமை தாங்கினார். ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை, அறிவியல் கல்லூரி முதல்வர் செயலர், பி.எல்.சிவக்குமார் கருத்தரங்க நோக்கம் குறித்து உரையாற்றினார்.

கோயம்புத்தூர், சிறுதுளி அமைப்பின் நிர்வாக அறங்காவலர் வனிதா மோகன் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு, 50 ஆய்வுக்கட்டுரைகள் அடங்கிய ஆய்வுக்கோவையை வெளியிட, எஸ்.என்.ஆர்.சன்ஸ் அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் சுந்தர் ராமகிருஷ்ணன் பெற்றுக் கொண்டார். தொடர்ந்து, சிறப்பு அழைப்பாளர் வனிதா மோகன் பேசியதாவது : சுற்றுச்சூழல் பாதுகாப்பு, தூய்மை நகரம் ஆகியவற்றை மையப்படுத்தி நடைபெறும் இந்த கருத்தரங்கம் பாராட்டுக்குரியது. கோயம்புத்தூர்



போன்ற பெரு நகரங்களில் தூய்மையின்மையால் பாதிக்கப்பட்டு பல்வேறு தொற்று நோய்களால் அவதிப்படு பவர்கள் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. ஸ்ரீ ராமகிருஷ்ணா பள்ளியில் 3ஆம் வகுப்பு படிக்கும் மாணவி 3டன் குப்பைகளைச் சேகரித்து உள்ளார் என்பது மிகவும் பாராட்டுக்குரியது. இது போன்று நம் பிள்ளைகளுக்கும் சுற்றுப்புறத் தூய்மை பற்றி கற்றுக் கொடுக்க வேண்டும்.

கோவையை உலகத் தர தூய்மை நகரமாக மாற்ற முன்னெடுக்கப்பட்டுள்ள இந்த நிகழ்வு ஒரு விதை போன்றது. இனிவரும் காலங்களில் இது போன்ற விதைகள் வளர்ந்து நிச்சயம் மரமாக வளரும். அதற்கு நாம் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். இவ்வாறு அவர் குறிப்பிட்டார். நிகழ்வில் , யுஐடி கல்வி அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலரும், மீத்தலால் ஜெயின் அன்கோ நிர்வாக பங்குதாரரும், ஒளிரும் கோவை அமைப்பின் நிறுவன தலைவருமான சிஏ கைலாஷ் குமார் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு உரையாற்றினார்.

தமிழ்நாடு மாநில வன விலங்கு வாரிய உறுப்பினரும், ஓசை சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்பின் தலைவருமான கே. காளிதாஸ் வாழ்த்துரை வழங்கினார்.

ஒரு நாள் கருத்தரங்கில் கோயம்புத்தூரை உலகத் தர நகரமாக மாற்றுவோம் எனும் பொருண்மையில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் உள்ள ஆராய்ச்சியாளர்கள், கல்வியாளர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்களைச் சார்ந்தவர்கள், சமூக சேவகர்கள் எனப் பல தரப்பிலிருந்து 50 ஆய்வுக்கட்டுரைகள் பெறப்பட்டன. அவற்றுள் வல்லுநர் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட 10 ஆய்வுக்கட்டுரைகளை எழுதிய கட்டுரையாளர்கள் நேரில் வரவழைக்கப்பட்டு வல்லுநர் குழுவின் முன்னிலையில் கட்டுரைகள் வழங்கினர்.

அவற்றுள் சிறந்த 3 கட்டுரைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு ரொக்கப் பரிசுகள் வழங்கப்பட்டன. தொடர்ந்து, மாலையில் நடைபெற்ற நிறைவு விழாவில், கோவை தி சென்னை மொபைல்ஸ் நிறுவனர் , நிர்வாக இயக்குநர் ஏ.எம். சம்சு அலி சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு ரொக்கப் பரிசுகள் வழங்கினார். அதன்படி, முதல் பரிசாக ரூ.15,000/ ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை , அறிவியல் கல்லூரி கணினி பயன்பாட்டியல் துறை உதவிப்பேராசிரியர் முனைவர் பி.நரசிம்மனுக்கும், இரண்டாம் பரிசாக ரூ.10,000/ அவினாசிலிங்கம் மனையியல் , மகளிர் உயர்கல்வி நிறுவனத்தின் மாணவி வி.சண்முக பிரியாவிற்கும், மூன்றாம் பரிசாக ரூ.5,000/ ஸ்ரீ ராமகிருஷ்ணா மகளிர் கலை அறிவியல் கல்லூரி மாணவிகள் எம்.மோகனா, ஆர். ஸ்ரீ லஷ்மி ஆகியோருக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. கருத்தரங்கில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களைச் சார்ந்த 200க்கும் மேற்பட்ட கட்டுரையாளர்கள் பங்கேற்று பயன் பெற்றனர். கருத்தரங்கினைக் கல்லூரியின் அகமதிப்பீட்டு தர நிர்ணயக் குழு ஒருங்கிணைப்பாளர்கள் ஐ.பா்வின் பானு, வி.கிருஷ்ணபிரியா, ஒளிரும் கோவை அமைப்பின் உறுப்பினர்கள் மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

## காரைக்குடியில்

# அனுமதி இன்றி செயல்பட்ட இறைச்சி கடைகளில் இருந்து இறைச்சிகள் பறிமுதல்

**காரைக்குடி, ஏப்.1**

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் நேற்று மகாவீர் ஜெயந்தியை முன்னிட்டு இறைச்சிக் கடைகள் மற்றும் அரசு டாஸ்மாக் கடைகளுக்கு விடுமுறைவிடப்பட்டிருந்த நிலையில் அனுமதி இன்றி செயல்பட்ட இறைச்சி கடைகளில் இருந்து சுமார் 150 கிலோ கோழி இறைச்சியை காரைக்குடி சுகாதாரத்துறை அதிகாரிகளால் பினாயில் ஊற்றி அழிக்கப்பட்டது.




காரைக்குடி வாட்டர் டேங்க், பர்மா காலனி, மருது பாண்டியர் நகர், மகர் நோன்பு திடல், மற்றும் பல்வேறு பகுதிகளில் அனுமதி இன்றி இயங்கி வந்த கோழி இறைச்சி கடைகளை சுகாதாரத் துறை நகர் நலஅலுவலர் வினோத் ராஜ், சுருளி நாதன்,

ஆய்வாளர்கள் ஆதி நாராயணன் வெங்கடேஷ் ஆகியோர் அடங்கிய குழு நேற்று அனைத்து பகுதிகளிலும் சோதனை நடத்தினர்.

அதில் சுமார் 11 கடைகளில் இருந்து 150 கிலோ கோழி இறைச்சியை பறிமுதல் செய்து பினாயில் ஊற்றி அழித்தனர். மேலும் அனைத்து கடைகளுக்கும் ரூபாய் 16 ஆயிரத்து 500 அபராதமாக விதித்தனர்.

# வாடிக்கையாளர்களை இழிவு படுத்தும் இண்டஸ்இன்ட் வங்கி! நடவடிக்கை எடுக்குமா ரிசர்வ் வங்கி?

சென்னை மணலி மாத்தூர் குடியிருப்பு பகுதியில் வசிக்கும் திருஞானம் என்பவர் இந்தஸ்இந்து பாரி முனை கிளை மூலம் ஜூன் மாதம் 2022 ஆண்டு hydraulic excavator இளம் தலைமுறையை ஊக்குவிக்கும் வகையிலும், இளம் தொழில் முனைவோர் எனவும் தனது மகன் பெயரில் 56,45,000/ மதிப்புடன் சுமார் 8,67,000/ சரக்கு மற்றும் சேவை வரி செலுத்தி வாங்கியுள்ளார் இந்தஸ்இந்து வங்கியில் 50,00,000/ கடன் பெற்று அறுபது தவணைகள் திருப்பி செலுத்த ஒப்புக் கொண்டு தனது பெயரில் சுமார் ஒன்றரை கோடி மதிப்புள்ள வீடு உள்ள நிலையில் தான் உத்தரவாதம் அளித்து பெற்று கொண்டார். இருபது மாதங்கள் தவணைத் தொகை திருப்பி செலுத்திய நிலையில் வண்டி ஓடிய இடத்தில் இருந்து வர வேண்டிய நிலுவைத் தொகை வராத நிலையில் மூன்று கவலைகள் பாக்கி இருந்த நிலையில் வண்டியை நீதிமன்றம் அளித்த தீர்ப்பை சரியான முறையில் பின்பற்றாமல் பறிமுதல் செய்து 57,00,000/ லட்சம் பொறுமான வண்டியை இரண்டு ஆண்டுகள் மட்டுமே ஆன நிலையில் 25,00,000/




ரூபாய்க்கு விற்றதாக இந்தஸ்இந்து தகவல் அளித்தனர். இது வங்கியின் ஊழியர்கள் சுயலாப அடிப்படையில் பொய்யாக விற்பனை தொகை குறிப்பிடப்பிப்பட்டது. ஆர்பிடேஷனுக்கு முறையாக பதில் அளித்தும், அவரின் முதலீடு குறித்து எந்த விதவொரு பொருட்டும் கொள்ளாது வங்கியின் நடவடிக்கை வாடிக்கையாளர்களை இழிவு படுத்தும் வகையில் செயல்பட்டு சுயலாப நோக்கில் நடந்துள்ளது. எனினும் அவர் தரப்பில் மேல் நடவடிக்கை நீதிமன்றம் மூலம் எடுக்க வங்கி நிர்வாகம் பெயர் கெட்டுவிடும் என பின்வாங்க எனது மற்றும் தனது மகன் பெயரில் தொழிலை கெடுத்ததுடன் பல லட்ச ரூபாய் இழப்பு ஆன பின்பும் கடன் தகவல் நிறுவனம்( CIBIL) ல் தொடர்ந்து தொகை குறிப்பிட்டு இழிவு படுத்தி வருகிறது என தெரிவிக்கிறார்.

இது போன்று பல வங்கிகள் தங்களது வாடிக்கையாளர்களை அவர்களது முதலீடு மற்றும் தொழிலில் இடையூறுகளை கவனத்தில் கொள்ளாமல் கடுமையான முறையில் நடந்து கொள்வது, தனது ஊழியர்கள் நடவடிக்கை குறித்து ஆராயாமல் வாடிக்கையாளர்கள் ஏமாற்றபடுவதை முறைப்படுத்த வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார்.


# மகாவீர் ஜெயந்தி தினத்தில் கள்ளச்சந்தையில் மது விற்பனை அமோகம் :

**கோவை, ஏப்., 01 :**

கோவை மாவட்டம், குனியமுத்தூர் பாலக்காடு சாலையில் உள்ள மது பான பாரில், மகாவீர் ஜெயந்தி தினத்தன்று, கள்ளச்சந்தையில் காலை முதலே மதுவிற்பனை நடைபெற்றது.

இது குறித்து குனியமுத்தூர் காவல் துறையினருக்கு பொதுமக்கள் புகார் அளித்தனர், ஆனால் காவல் துறையில் புகார் அளித்தும் எந்த நடவடிக்கை எடுக்கவில்லை என்று குற்றம் சாட்டியுள்ளனர்.

மகாவீர் ஜெயந்தி தினத்தன்று மது விற்பனை செய்யகூடாது என்று கோவை மாவட்ட ஆட்சியர் மற்றும் மாநகரகாவல் ஆணையர் கண்ணன் ஆகியோர் எச்சரிக்கை





விடுத்திருந்தனர். இருப்பினும் தடையை மீறி சாதாரணமாக மது விற்பனை நடைபெற்றதை பார்த்து பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

# சிறப்பு இரயில்களின் சேவை காலம் நீட்டிப்பு மற்றும் இரயில் சேவைகளில் மாற்றங்கள்;

## தெற்கு ரயில்வே அறிவிப்பு

**மதுரை:**

தெற்கு இரயில்வேயின் திருவனந்தபுரம் கோட்டத்தில் உள்ள இரணியல் மற்றும் நாகர்கோவில் டவுன் நிலையங்களுக்கு இடையே இரட்டை இரயில் பாதை பணிகளுக்காக 'லைன் பிளாக்' (Line Block) அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக இரயில் சேவைகளில் கீழ்க்கண்ட மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

இரயில் சேவைகள் ரத்து:

வண்டி எண். 56705 புனலூர் கன்னியாகுமரி பாசஞ்சர்: 01.04.2026, 02.04.2026 மற்றும் 03.04.2026 ஆகிய தேதிகளில் ரத்து செய்யப்படுகிறது. வண்டி எண். 56706 கன்னியாகுமரி புனலூர் பாசஞ்சர்: 01.04.2026 மற்றும் 02.04.2026 ஆகிய தேதிகளில் ரத்து செய்யப்படுகிறது. வண்டி எண். 56707 கன்னியாகுமரி திருநெல்வேலி பாசஞ்சர்: 03.04.2026 அன்று ரத்து செய்யப்படுகிறது.

இரயில் சேவைகள் பகுதி ரத்து:

வண்டி எண். 22627 திருச்சிராப்பள்ளி சந்திப்பு திருவனந்தபுரம் சென்ட்ரல் இன்டர்சிட்டி எக்ஸ்பிரஸ்: 01.04.2026 மற்றும் 02.04.2026 ஆகிய தேதிகளில் திரு



நெல்வேலி சந்திப்பு மற்றும் திருவனந்தபுரம் சென்ட்ரல் இடையே பகுதி நேரமாக ரத்து செய்யப்படுகிறது. (இந்த இரயில் திருநெல்வேலி வரை மட்டுமே இயங்கும்). வண்டி எண். 22628 திருவனந்தபுரம் சென்ட்ரல் திருச்சிராப்பள்ளி சந்திப்பு இன்டர்சிட்டி எக்ஸ்பிரஸ்: 01.04.2026 மற்றும் 02.04.2026 ஆகிய தேதிகளில் திருவனந்தபுரம் சென்ட்ரல் மற்றும் திருநெல்வேலி சந்திப்பு இடையே பகுதி நேரமாக ரத்து செய்யப்படுகிறது. (இந்த இரயில் திருநெல்வேலியில் இருந்து திருச்சிக்கு புறப்படும்).

வடக்கு மத்திய இரயில்வே, பயணிகளின் தேவையைக் கருத்தில் கொண்டு கீழ்க்கண்ட சிறப்பு இரயில்களின் சேவை காலத்தை அதே நேரம், நிறுத்தங்கள் மற்றும் பெட்டிகளின் எண்ணிக்கையுடன் நீட்டிப்பதாக அறிவித்துள்ளது:வண்டி எண். 01927/01928 கான்பூர் சென்ட்ரல் – மதுரை – கான்பூர் சென்ட்ரல் எக்ஸ்பிரஸ் சிறப்பு இரயில்கள் வண்டி எண். 01927 கான்பூர் சென்ட்ரல் – மதுரை எக்ஸ்பிரஸ் சிறப்பு இரயில்:ஏப்ரல் 01 முதல் மே 27, 2026 வரை புதன்கிழமைகளில் காலை 08.10 மணிக்கு கான்பூர் சென்ட்ரலில் இருந்து புறப்பட்டு, மூன்றாம் நாள் காலை 07.15 மணிக்கு மதுரையை சென்றடையும் (9 சேவைகள்). வண்டி எண். 01928 மதுரை – கான்பூர் சென்ட்ரல் எக்ஸ்பிரஸ் சிறப்பு இரயில்:ஏப்ரல் 03 முதல் மே 29, 2026 வரை வெள்ளிக்கிழமைகளில் இரவு 23.35 மணிக்கு மதுரையில் இருந்து புறப்பட்டு, நான்காம் நாள் அதிகாலை 04.30 மணிக்கு கான்பூர் சென்ட்ரலை சென்றடையும் (9 சேவைகள்). மேற்கண்ட சிறப்பு இரயில்களுக்கான முன்பதிவு தெற்கு இரயில்வேயில் விரைவில் தொடங்கும் என ரயில்வேயின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJAV. CALL: 044-22772026,9443699066